பக்கங்கள்: 12

காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 19 புதன்கிழமை 02.04.2025 கதிர் 145

# தையிட்டி விகாரை விடயத்தில் நீதியை நிலைநாட்டவேண்டும்

## கலந்துரையாடலுக்கு அழைப்பது ஏமாற்று என்கிறார் அருட்தந்தை சக்திவேல்

சட்டத்துக்கு புறம்பாக கட்டப்பட்ட விகாரை மற்றும் மட ஆலயத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடமும் தமிழர்களிடமும் அரசும், தேசியமக்கள்சக்தி ஆளும்தரப்பும் மன்னிப்பு கோருவதோடு தமிழர்கள் எதிர்பார்க்கும் நீதி உறுதிப்படுத்தப்படுதலும் வேண்டும். அதுவே சமய மற்றும் இன நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும். தையிட்டியில் சட்டவிரோத விகாரை பாதிக்கப்பட்ட மக்களை கலந்துரையாட அழைப்பது தமிழர்களை மீண்டும் ஒருமுறை ஏமாற்றுவதற்கே என்று சமூகநீதிக்கானசெயற்பாட்டாளரும்அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நீதி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் யாழ். நாக விகாரையில் அவ்விகாரையின் தலைவர் மற்றும் சமய தலைவர்கள், நீதி அமைச்சர் ஆகியோரின் பங்கேற்போடு தையிட்டியில் சட்டத்துக்கு புறம்பாக ☞ 2




உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை நேற்று உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் இடம்பெற்றன. இலங்கை முழுவதும் 400 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், உயர் நீதிமன்றத்தில் மட்டும் 40 மனுக்கள் இதற்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலும் ஒரு டசின் வழக்குகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உள்ளன. ☞ 2

## கொழும்பில் பாதுகாப்பு தீவிரம்

பண்டிகை காலத்தை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் பாதுகாப்பு கடமைகளில் 6,000 அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

பொலிஸாரை தவிர இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

வீதித்தடை கண்காணிப்புகளுக்காக இராணுவம் கடமையில் ஈடுபடுத்தப்படுவதோடு பொலிஸார் சிவில் உடை மற்றும் துப்பாக்கிகளுடன் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வு உத்தியோகத்தர்களும் கடமையில் ஈடுப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்

# 13 குறித்து இந்தியாவுடன் பேசுவது அவசியமற்றது

## பொதுஜன பெரமுன திடீர் அறிவிப்பு

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது அவசியமற்றது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்ந்தளித்தால் தேவையில்லாத முரண்பாடுகள் தோற்றம் பெறும். இந்தியாவுடன் ஆளும்தரப்பு செய்துக்கொள்ளவுள்ள ஒப்பந்தங்கள் குறித்து தீவிர அவதானம் செலுத்தியுள்ளோம் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் ☞ 2

## எரிபொருளின் விலையை மேலும் குறைக்கமுடியாது

### அமைச்சர் கிரிஷாந்த திட்டவட்டம்

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் தொடர்ந்து நடைமுறையில் இருப்பதால், எரிபொருள் விலையை மேலும் குறைக்க முடியாது என அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிரிஷாந்த அபேசேன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசும்போது இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 8

## சாமர சம்பத் எம்.பியின் மறியல் மீண்டும் நீடிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கான விளக்கமறியல் ஏப்ரல் 8 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அவர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று காலை முற்படுத்தப்பட்டார். பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைவாக அவரது விளக்கமறியலை நீடித்து நீதிவான் உத்தரவிட்டார்.

ஊவா மாகாண முதலமைச்சராகப் பதவிவகித்த காலப்பகுதியில் நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் நாடாளுமன்ற ☞ 8

## பெற்றோல் விலை குறைந்தாலும் ஓட்டோ கட்டணங்கள் குறையாது

நேற்று நள்ளிரவு முதல் பெற்றோல் விலை குறைக்கப்பட்ட போதிலும், முச்சக்கரவண்டி (ஓட்டோ) கட்டணத்தைக் குறைக்க முடியாது என்று, மேல் மாகாண முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய சங்கத்தின் தலைவர் லலித் ☞ 8

## மியான்மருக்கு உதவி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்

### ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்து

நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மியன்மாருக்கு உதவிகளை வழங்குவதற்கு இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை இராணுவ ருத்துவர்கள் அடங்கிய ஒரு குழுவை உடனடியாக மியன்மாருக்கு அனுப்ப வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மியன்மாரில் ஏற்பட்ட நிலநடுக்கத்திற்கு இலங்கை அரசு வருத்தம் தெரிவித்துள்ளது. மியன்மார் இலங்கையுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்ட ஒரு நாடு. தேரவாத பௌத்தத்துடன் எங்களுக்கும் மியான்மருக்கும் பரஸ்பர ☞ 2

### வேட்புமனு நிராகரிப்புக்கு எதிரான வழக்குகளில்

## தேர்தல் பணிகளுக்கு இன்று வரையும் தடை

### மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்தது

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்துள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தேர்தல் ஏற்பாடுகளை இன்று வரை நிறுத்தி வைக்குமாறு சம்பந்தப்பட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மனுக்களைப் பரிசீலித்த பின்னர், மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் மொஹமட் லாஃபர் தாஹிர் ☞ 8

## அரைவாசி விலையில் உலர் உணவுப் பொதி

### 'அஸ்வெசும'வுக்கு காத்திருப்போருக்காக

அஸ்வெசும பயனாளிகளாகப் பதிவு செய்து தற்போது காத்திருப்போர் பட்டியலிலுள்ள குடும்பங்களுக்கு சலுகை விலையில் உணவுப் பொதிகளை வழங்கும் வேலைத்திட்டம் ☞ 8

## பொலிஸ் பேச்சாளரின் விளக்கம்

பயங்கரவாததடைச்சட்டத்தில்கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மொஹமட் ருஷ்டி என்ற இளைஞர் புனர்வாழ்வு அளிக்கப்படவேண்டியவர் என ஜம்மியதுல் உலமா சபை தெரிவித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்தி மனதுங்க தெரிவித்துள்ளார் என்று பிபிசி சிங்கள சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

ருஷ்டியின் கைது விவகாரம் தொடர்பில் பிபிசிக்கு கருத்து வெளியிட்டுள்ள பொலிஸ் ஊடப்பேச்சாளர்,

ஸ்டிக்கர் ஒட்டியதற்காகவே அவரை கைது செய்ப்படவில்லை. அவரை விசாரிக்கும்போது, அவர் அடிப்படைவாத கொள்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது எங்களுக்குத் தெளிவானது. இலங்கையின்பலஇடங்களிலும் இத்தகைய ஸ்டிக்கர்கள் ☞ 8

### பலஸ்தீன ஆதரவு சுவரொட்டி விவகாரம்;

## முஸ்லிம் இளைஞன் கைதுக்கு உலாமா சபையினர் கண்டனம்

அகிலஇலங்கைஜம்இய்யத்துல் உலமா எந்தவொரு நபரும் சட்டபூர்வமானவழியில்,ஜனநாயக முறையில்தமதுகவலைகளையும் கரிசனைகளையும் வெளிப்படுத்துவதற்காக கைது செய்யப்படுவதை வன்மையாகக் கண்டிக்கிறது. இலங்கை எப்போதும் அனைத்து விதமான அடக்குமுறைகளுக்கும் எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட ஒரு நாடாகும்; குறிப்பாக பாலஸ்தீன மக்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள தொடர்ந்தேர்ச்சியான ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தினருடன் மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணிகளைப் பேசி ஒரு இணக்கத்திற்கு வரும்படி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. அதனடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை சம்பந்தப்பட்ட தரப்புக்கள் கலந்து பேசின. அந்தச் சந்திப்பில், பிறப்புச் சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை ஏற்றுக்கொள்வதில் ஒரு உடன்பாட்டுக்கு இரு தரப்பினரும் வந்திருந்தனர் என்ற தோற்றப்பாடு இருந்தது. மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணியான நிசாம் காரியப்பர்கூட அத்தகைய ஒரு எதிர்பார்ப்பைத்தான் சந்திப்பின் பின்னர் வெளிப்படுத்தியிருந்தார். ஆனால், நேற்று நீதிமன்றில் தேர்தல் ஆணைக்குழுவின் நிலைப்பாடு தலைகீழானதாக இருந்தது.

தமது நிலைப்பாட்டில் தேர்தல்கள் ஆணைக்குழு திடமாக இருக்கின்றது என்றும், பிறப்புச் சான்றிதழ்களை உறுதிப்படுத்தும் விவகாரம் உட்பட சிக்கல்கள் தொடர்பில் கட்சிகளும் சுயேச்சைகளும் நீதிமன்றத்தில் தமது வாதங்களை முன்வைத்தே தீர்வைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. அதாவது இந்த விவகாரத்திலும்கூட இரு தரப்பினருக்கும் இடையில் எந்தவிதமான இணக்கமும் ஏற்படவில்லை என்று நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டது. இதையடுத்து வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

தனிப்பட்ட மூன்று வழக்குகளில் அந்த வேட்புமனுக்களை ஏற்பதற்கு தேர்தல் ஆணைக்குழு நீதிமன்றத்தில் இணக்கம் தெரிவித்தது. ஏனைய வழக்குகளில் தமது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்றும் அது அறிவித்தது. இதனால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ் அரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி போன்ற தமிழ்த் தரப்புக்களின் வழக்குகளும் இனி நீதிமன்ற வாதங்களுக்குப் பின்னரே முடிவு செய்யப்படும்.

நேற்றைய அமர்வின்போது, இந்த வழக்குகளில் யாரைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிடுவது என்பது குறித்த சட்டச் சிக்கல் சட்டமா அதிபர் திணைக்களத்தால் எழுப்பப்பட்டது. இருதரப்பினரும் வாதங்களை முன்வைத்ததைத் தொடர்ந்து அவற்றை எழுத்து மூலம் சமர்ப்பிக்க உத்தரவிட்ட நீதியரசர்கள், அதற்கான கால அவகாசம் வழங்கி வழக்கை நாளைவரை ஒத்தி வைத்தனர். உயர் நீதிமன்ற நீதிபதிகள் துரராஜா, மஹிந்த சமயவர்தன மற்றும் சம்பத் அபேகோன் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் அமர்வு இந்த உத்தரவை வழங்கியது.

.............................

ஜனாதிபதித் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு கிழக்கில் பெரும் அலை ஏதும் இருக்கவில்லை. அந்தத் தேர்தலில் அநுரவே முன்னிலை பெறுவார் என்கிற எதிர்பார்ப்பு இருந்தபோதும் மிகச் சொற்ப எண்ணிக்கையானவர்களே வடக்கு கிழக்கில் அவருக்கு வாக்களித்திருந்தார்கள். ஆனால் தேர்தலில் தட்டுத்தடுமாறி அவர் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அவரது தரப்பான தேசிய மக்கள் சக்திக்கு நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு அலை அடித்தது. வடக்குக் கிழக்கில் அந்த அலையின் தாக்கம் இருந்தது. அதன் காரணமாகவும் விகிதாசாரத் தேர்தல் முறையின் காரணமாகவும் தேசிய மக்கள் சக்தி வடக்கில் வெற்றியைப் பெற்றது.

இப்போது அடுத்த தேர்தல். தெற்கில் அநுர அலை மற்றும் தேசிய மக்கள் சக்தி அலை கணிசமாகத் தொடர்கின்றது. எதிர்க் கட்சிகள் இன்றைய ஆட்சியாளர்களின் குறைகளைத் தூக்கிப்பிடித்தாலும் இன்னும் அநுர அலையின் மவுசு அங்கு குறையவில்லை என்பதே பெரும்பாலானவர்களின் கருத்து. ஆனால், வடக்குகிழக்கில் நிலைமை அப்படியில்லை. தமிழ் மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தி தொடர்பில் பெரும் குழப்பம் ஒன்று தோன்றியுள்ளது தெளிவாகத் தெரிகிறது. தேசிய மக்கள் சக்தியை நம்பலாமா வேண்டாமா என்கிற குழப்பம். எப்போதும் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு வால் பிடிப்பவர்கள் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பைத் தாங்கிப் பிடிப்பது போன்று பாவனை செய்து அவர்களுக்கு ஆதரவுப் பரப்புரைகளில் ஈடுபட்டிருந்தாலும் அவர்களும் உள்ளூர ஆளும்தரப்பின் செயற்பாடுகளால் ஆடித்தான் போயிருக்கிறார்கள். ஆளும்தரப்பை தாங்கள் மக்களிடம் நியாயப்படுத்துவதற்கு எந்தவொரு வாய்ப்பையும் தராமல், தொடர்ந்தும் தமிழ் மக்கள் விரோத முடிவுகளுடனும் அணுகுமுறையுடனுமே தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு நகர்கின்றது என்று அவர்களும் குமுறுகிறார்கள்.

அண்மையில் தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் யாழ்.மாநகரசபைக்கான தேசிய மக்கள் சக்தியின் முதன்மை வேட்பாளரான யாழ். பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் பேசும்போது, "தமது ஆளும்தரப்பு பல நல்ல காரியங்களைச் செய்தாலும் அவையெல்லாம் வெளியே தெரியவில்லை" என்று நிலைமையைச் சமாளிப்பதற்குக் கடுமையாகத் திணறினார். அந்தப் பேட்டி முழுவதும் ஆளும்தரப்பு செய்த நல்ல காரியங்கள் பலவற்றில் சிலவற்றைக்கூட அவரால் பட்டியலிட முடியவில்லை என்பதுதான் உண்மை நிலை. இது போன்று இன்றைய ஆளும்தரப்பு ஆதரவாளர்கள் எல்லோரும் பெரும் குழப்பத்திற்குள் உள்ளார்கள்.

தையிட்டி விகாரை விவகாரம், ஆனையிறவு உப்புக்குச் சிங்களப் பெயர், அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணி விடுவிப்பு என்று எந்தப் பக்கம் திரும்பினாலும் இதுவரையில் தமிழ்க் கட்சிகளையும் ஐக்கிய தேசியக் கட்சி, பொது ஜன பெரமுனவையும் பார்த்துக் கேட்ட, கேளாக் கேள்விகளை எல்லாம் இப்போது 'திசைகாட்டி'யை நோக்கியும் தமிழ் மக்கள் கூச்சமின்றி வாரி இறைக்கிறார்கள். திசைகாட்டி வந்தால் வேலை கிடைக்கும், பொருளாதாரம் நிமிரும் என்ற கற்பனைகளுடன் வாக்களித்த இளையவர்கள்கூட இனியும் இவர்களை நம்பலாமா என்கிற குழப்பதிலேயே இருக்கிறார்கள். "நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களுக்குத்தான் (திசைகாட்டி) போட்டோம். ஆனால் இந்த முறை மாறவேண்டியிருக்குமோ என்று யோசிக்கிறோம்'' என்கிறார்கள் இளையவர்கள்.

தமிழர்களையும் சிங்களவர்களையும் சமாளித்து (எல்லோரையும் ஏமாற்றி) எப்படி வெல்வது என்கிற உண்மையான சோதனைக் களம் இப்போதுதான் தேசிய மக்கள் சக்திக்குத் திறக்கப்பட்டிருக்கின்றது என்பது தெளிவாகிறது. பார்க்கலாம் அடுத்துவரும் ஒரு மாத காலத்தில் இது எந்தத் திசை நோக்கி வேகமாகத் திரும்புகின்றது என்று.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தையிட்டி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டப்பட்ட விகாரை காரணமாக பாதிக்கப்பட்டவர்களோடு கலந்துரையாடலொன்று நாளை வியாழக்கிழமை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதுசமய பிரச்சினையாக உருவேற்றப்பட்டு வருகின்றது. உண்மையில் இது தமிழர்களின் தேசிய அரசியல் சார்ந்த பிரச்சினை. சட்டத்துக்கு புறம்பாக கட்டப்பட்ட விகாரை மற்றும் மட ஆலயத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடமும் தமிழர்களிடமும் அரசும், தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பும் மன்னிப்பு கோருவதோடு தமிழர்கள் எதிர்பார்க்கும் நீதி உறுதிப்படுத்தப்படுதலும் வேண்டும். அதுவே சமய மற்றும் இன நல்லிணக்கத்துக்கு வழிவகுக்கும்.

படையினர் தமது இராணுவ வரையறைகளுக்கு அப்பால் சென்று நாட்டின் சட்டத்தையும் மீறி அரச வளங்களையும், தனியார் வளங்களையும் உபயோகித்து இன மற்றும் சமய முரண்பாட்டை தோற்றுவிக்கும் வகையில் ஆக்கிரமிப்பு மனப்பான்மையோடு தையிட்டியில் விகாரை எழுப்பியுள்ளதோடு அதனை மேலும் பலப்படுத்த மடாலயத்தையும் கட்டியுள்ளனர்.

கட்டட மற்றும் நாட்டின் சட்ட நெறிமுறை தவறிய குற்றவாளிகள், இதற்கு அனுமதி அளித்த அரசியல் தலைமைகள், துணை நின்ற பேரினவாதச் சக்திகளை நீதி முன் நிறுத்தத் திராணியற்ற அரசும் நீதி அமைச்சரும் சமய நல்லிணக்கம் எனும் போர்வையில் பாதிக்கப்பட்ட மக்களை கலந்துரையாட அழைப்பது தமிழர்களை மீண்டும் ஒருமுறை ஏமாற்றுவதற்கே.

அதுவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கையில் அதற்கான காலம் நெருங்கிக்கொண்டிருக்கையில் மக்களின் ஆதரவை திரட்டுவதற்காக மறைமுகமாக எடுக்கப்படும் முயற்சியாகவே இக்கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது எனலாம்.

அத்தோடு இதய சுத்தியோடு பிரச்சினைக்கான தீர்வு நோக்கி ஆட்சியாளர்கள் பயணிக்க விரும்புவதில்லை என்பதையுமே வெளிபடுத்துகிறது. இது சாதாரண மக்களை அழைத்து அரசியல் பம்மாத்து காட்டும் வெளி வேடமே.

கடந்து வருடம் நிகழ்ந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் தமிழர்களின் பூமிக்கு வந்து 'அரசியலில் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம்' என்றவர் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சார மேடையிலும் அதே கருத்தினை வெளிப்படுத்தினார். அரசமைத்த பின்னர் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று கூறியவர்கள் இப்போது அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய முடியாது. அதற்கு பல சட்ட வழிமுறைகள் இருக்கின்றன என்று கூறுவது ஏன்?

தேர்தலுக்கு முன்பாக கூறியதும் தேர்தலுக்கு பின்பாகக் கூறியதும் ஆட்சி பீடத்திலிருந்து கூறுவதும் நேரெதிர் கருத்துக்களாகவே உள்ளன. அதைப் போன்றுதான் தையிட்டி விவகாரத்திலும் நீதி நிலைநாட்டப்படும் என்றவர்கள் தற்போது எத்தகைய நீதி எனக் கூறமுடியாமல் பாதிக்கப்பட்ட மக்களை அழைத்துக் கலந்துரையாடல் நடத்த நினைப்பது மக்களைத் திசைதிருப்பி முட்டாள்கள் ஆக்கும் எண்ணத்திலேயே ஆகும்.

திஸ்ஸ விகாரை கட்டப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்கள் கொழும்புக்கு வந்து பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவியை சந்தித்து கலந்துரையாடல் நடத்தியும் பின்னர் நம்பிக்கையோடு ஊர் திரும்பி மகிழ்ந்திருக்கையில் அம்மகிழ்வில் மண் அள்ளி தூவியதன் அடையாளமாக இந்த விகாரைக்கு அண்மையில் சட்ட விரோதமாக மடாலயம் கட்டப்பட்டு அரச ஆசீர்வாதத்தோடு மங்கலகரமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இது தொடர்பாக பௌத்த சாசன அமைச்சரோ, நீதி அமைச்சரோ தேசிய மக்கள் சக்தியில் இன மற்றும் சமய நல்லிணக்கம் சார்ந்து கருத்து தெரிவிப்பவர்களோ எதுவித கருத்தையும் முன்வைக்காத நிலையில் பாதிக்கப்பட்டவர்களோடு கலந்துரையாடல் நடத்த அவசரப்படுவதேன்? எல்லாம் கட்சி அரசியலும் தேர்தல் அரசியலுமே.

சட்டவிரோத தையிட்டி விகாரையும் புதிய மடாலயமும் தமிழர்களின் அரசியல் மைய பிரச்சினையாகும். அத்தோடு கட்டமைக்கப்பட்ட பேரினவாத அரச பயங்கரவாதப் பிரச்சினையுமாகும். இதற்கு அரசியல் ரீதியிலான நீதியான தீர்வுக்கு முன்வர துணிவில்லாமல் நிலமிழந்த மக்களின் குறுகிய பிரச்சினையாக மட்டுப்படுத்தி அவர்களோடு மட்டும் கலந்துரையாடுவதும் ஏனைய சமய தலைவர்களை அழைத்து ஆசி பெறுவதும் பிரச்சினையை மூடிவளர்ப்பதற்கான திட்டமே. அத்தோடு இதன் மூலம் தாம் விரும்பிய தீர்வினை முன்வைக்கவும் ஆட்சியாளர்கள் விரும்பலாம். ஆனால், இதனை தமிழர்கள் ஏற்கப்போவதில்லை என்பது மட்டும் உறுதி.

தற்போதைய ஆட்சியாளர்கள் நாட்டின் முக்கிய பிரச்சினை எதனையும் தீர்க்க முன்வரவில்லை. அவ்வாறே தமிழர்கள் முகங்கொடுக்கும் அடிப்படை பிரச்சினைகளுக்கான தீர்வினை முன்வைக்கவும் ஆயத்தம் இல்லை. எனினும் வடக்கு - கிழக்கில் தமது அரசியலை பலப்படுத்துவதற்கு பல்வேறு புத்திகளை கையாளும் தந்திரமாகவே தையிட்டி தொடர்பில் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய அரசியல் சதிவலையில் தமிழர்கள் சிக்க மாட்டார்கள்.

இவர்களின் அரசியலை பலப்படுத்த இவர்களின் அரசியலில் விட்டில் பூச்சிகளானோர் தமிழர்களை சிக்கவைக்க முயல்வர். அத்தகையவர்கள் தமிழின துரோகிகள், இன அழிப்பாளர்கள் என்றே அடையாளப்படுத்தப்படுவார்கள்.

தையிட்டி சார்பாகவும் அடிப்படை பிரச்சினைகள் தொடர்பாகவும் நீதியான நேர்மையான தீர்வு எதுவுமின்றி மீண்டும் மீண்டும் தமிழர்களை ஏமாற்றி அரசியல் செய்ய நினைப்பவர்களை ஜனநாயக ரீதியில் அடிமட்டத்தில் அகற்றுவதற்கான சந்தர்ப்பமாக உள்ளூராட்சி தேர்தலை அணுகுவோம். ஏமாற்று தேர்தல் அரசியல்வாதிகளுக்கு தமிழர்கள் தக்க பாடம் புகட்டவும் வேண்டும். அது மட்டுமல்லாது தையிட்டி தொடர்பில் நீதியான தீர்வு கிடைக்கும் வரையில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் மக்கள் திரட்சியோடு போராட்டத்தில் பங்கேற்க வேண்டும். அதுவே எமது அரசியலுக்கு வலுசேர்க்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## 13 குறித்து....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாகர காரியவசம் தெரிவித்தார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகை குறித்துப் பேசியபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அரசமுறைப் பயணம் நாட்டுக்குச் சிறந்தது. மக்கள் விடுதலை முன்னணியைப் போன்று எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டு எந்தவொரு எதிர்க்கட்சியும் வீதியில் பதாதைகளுடன் போராடப் போவதில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அண்மையில் இந்தியாவுக்கு அரசமுறை பயணத்தை மேற்கொண்டிருந்தார். அங்கு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் நாட்டுக்கு முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை. ஓரிரு பொதுவான விடயங்கள் மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டன.

நெருக்கடியான நிலையில் இந்தியா இலங்கைக்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது என்பதை ஒருபோதும் மறக்கமுடியாது. இருநாடுகளுக்கும் இடையில் கைத்தாச்சிடப்படும் ஒப்பந்தங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்படும் இணக்கப்பாடுகள் இலங்கையின் இறையாண்மையை முன்னிலைப்படுத்தியதாக அமையவேண்டும்.

இந்தியாவுடன் இலங்கை ஆளும்தரப்பு செய்துக்கொள்ளவுள்ள ஒப்பந்தங்கள் குறித்து தீவிர அவதானம் செலுத்தியுள்ளோம். நாட்டுக்கு சாதகமாக அமையும் ஒப்பந்தங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் குறித்து இந்தியாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது அவசியமற்றது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிரந்தளித்தால் தேவையில்லாத முரண்பாடுகள் தோற்றம் பெறும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வாகவே மாகாண சபை முறைமை அமுல்படுத்தப்பட்டது. மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு 'நல்லாட்சி' அரச தலைவர்கள் பொறுப்புக் கூறவேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார்.

## மியான்மருக்கு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருங்கிய உறவு உள்ளது.

அமரபுர மற்றும் ராமான்ய நிகாயக்கள் இரண்டும் மியன்மாருடன் தொடர்புகளைக் கொண்டுள்ளன. தேரவாத பௌத்தர்களுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்ட ஒரு நாட்டில் இதுபோன்ற பேரழிவு ஏற்படும்போது, நாம் அவர்களுக்கு தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன்.

2015ஆம் ஆண்டு நேபாளத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டபோது, நாங்கள் ஒரு நிவாரணக் குழுவை நேபாளத்திற்கு அனுப்பினோம். இந்தியாவிற்குப் பிறகு நேபாளத்திற்கு இரண்டாவது பெரிய உதவி நன்கொடையாளராக இலங்கை இருந்தது. சீனாவுக்கு முன்பே நாங்கள் அவர்களுக்கு உதவி செய்தோம்.

இன்று, இந்தியா, தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளும், அவுஸ்திரேலியா, சீனா போன்ற தொலைதூர நாடுகளும்கூட மியன்மாருக்கு உதவி செய்கின்றன. அவ்வாறெனில் நாமும் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். எனது பரிந்துரை என்னவென்றால், இலங்கை இராணுவத்தின் மருத்துவர்கள் அடங்கிய ஒரு குழுவை உடனடியாக மியன்மாருக்கு அனுப்ப வேண்டும்.

அந்த குழுவுக்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்படவேண்டும். மேலும் மியன்மாரில் ஒரு தற்காலிக மருத்துவமனையை நிறுவ ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். மேலும், அவர்களுக்குத் தேவையான மருந்துகளை பௌத்தர்கள் மற்றும் பௌத்தர் அல்லாதவர்கள் இருவரின் உதவியுடன் சேகரித்து அனுப்பும் திறன் உள்ளது. நாம் அந்த இணைப்பை ஏற்படுத்த வேண்டும்.

ரங்கூன் விமான நிலையத்திலிருந்து அல்லது தாய்லாந்திலிருந்து இந்திய விமானப்படையுடன் அங்கு செல்லும் வாய்ப்பு நமக்கு உள்ளது. கடந்த ஆண்டு, இலங்கை அரசாங்கம் காசா மோதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு மில்லியன் டொலர்களை நன்கொடையாக வழங்கியது. இந்த நேரத்தில், மியான்மருக்கு சில நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஆளும்தரப்புக்கு நான் முன்மொழிகிறேன் என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# போர்க்குற்றம் தொடர்பில் தடை விதித்தமையின் மூலம் இனப்படுகொலை நடந்ததை பிரித்தானியா ஏற்றுள்ளது

## வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்கம் சுட்டிக்காட்டு

போர்க் குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டதாக சில இராணுவத் தளபதிகளுக்கு பிரித்தானியா பயணத்தடைவித்துள்ளதன்மூலம்இனப்படுகொலைஒன்று இங்கு நடந்துள்ளதை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியா பழைய பஸ் நிலையப்பகுதிக்கு முன்பாக அவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் -

இலங்கை அரசானது நீண்ட காலமாக பொறுப்புக் கூறலில் இருந்து தவறியுள்ளது. இதனால் நாம் சர்வதேச நீதி கோரி தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். போர்க் குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டதாக சில இராணுவத் தளபதிகளுக்கு பிரித்தானியா பயணத்தடைவித்துள்ளதன் மூலம் இனப்படுகொலை ஒன்று இங்கு நடந்துள்ளதை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதை உணர முடியும்.

இவ்வாறு தடை விதிக்கப்பட வேண்டிய இன்னும் பல இராணுவத்தினர் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளும் உள்ளனர். அவர்கள் மீதும் இவ்வாறான தடைகளை விதிக்க வேண்டும். அனைத்துலக நாடுகளும் இந்த பயணத்தடைகளை விதித்து குற்றம் செய்தவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தி சர்வதேச பொறிமுறையூடாக எமக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும். இதுவே எமது எதிர்பார்ப்பு.





இதேவேளை, 19 காணாமல் போன உறவுகள் உயிருடன் இருப்பதை தாம் கண்டுபிடித்துள்ளதாக காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்தினர் அண்மையில் கூறியுள்ளனர். அவர்கள் உண்மையில் காணாமல் ஆக்கப்பட்டோர் இல்லை. நாம் தந்த சாட்சியங்களில் ஒன்றை கூட அந்த அலுவலகத்தினர் கண்டுபிடிக்கவில்லை. மாறாக சர்வதேசத்துக்கு அப்பட்டமான பொய்களை சொல்கின்றனர். பொய்யான அறிக்கைகளை அவர்கள் வெளியிடுகின்றனர்.

எனவே, எமது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இந்தநிலையில் சர்வதேச நீதிப் பொறிமுறையூடாகவே எமக்கான நீதியை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். - என்றனர். 100



# துப்பாக்கித ரவைகளுடன் ஒருவர் பொலிஸால் கைது

(தில்சாத் பர்வீஸ்)

அனுமதிப்பத்திரம் இல்லாத 'பொரதொளகாய் சொட் கண்' வகையைச் சேர்ந்த துப்பாக்கியும், ரி - 56 வகையைச் சேர்ந்த துப்பாக்கியின் 10 ரவைகளுடன் ஒருவர் பொலிஸார் கைது செய்துள்ளார். அத்தோடு துப்பாக்கி மற்றும் ரவைகளை சம்மாந்துறை பெருங்குற்றப்பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் திங்கட்கிழமை நண்பகல் வேளையில் இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் பெருங்குற்றப்பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, 'பொரதொளகாய் சொட் கண்' வகையைச் சேர்ந்த துப்பாக்கியும், ரி-56 வகையைச் சேர்ந்த துப்பாக்கியின் 10 ரவைகளுடன் சந்தேக நபர் ஒருவரை பெருங்குற்றப்பிரிவு அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மலையடிக்கிராமம் 04 பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய நபர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பன சட்டநடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் ஓய்வுபெற முன்னர் சிவில் பாதுகாப்பு படை உத்தியோகத்தர் என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த கைது நடவடிக்கையானது அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஜி.டி.எஸ். அமரசிங்கவின் பணிப்புரைக்கமைய கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசாரின் அறிவுறுத்தலுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத்தின் வழிகாட்டுதலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸ் சார்ஜன் டபிள்யூ.ஏ. சரத், பொலிஸ் உத்தியோகத்தர் எ.ம். நிரஞ்சன், ஜிஹான், பெண் பொலிஸ் உத்தியோகத்தர் நிலந்தி,



பொலிஸ் வாகன சாரதி அத்தனாயக்க, சிவில் பாதுகாப்பு படை உத்தியோகத்தர் சரத் உள்ளிட்ட அதிகாரிகளால் இக்கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருக்கோவிலில் தந்தை செல்வாவின் 127ஆவது பிறந்த தின நிகழ்வுகள்

(கார்த்திகேசு)

இலங்கை தமிழரசு கட்சியின் ஸ்தாபகரான தந்தை செல்வாவின் 127 ஆவது ஜனனதின நிகழ்வானது திருக்கோவிலில் இடம் பெற்று இருந்தது.

இந்நிகழ்வானது திருக்கோவில் 5 ஆம் வட்டாரக் கிளையின் தலைவர்பிநந்தபாலுவின் தலைமையில் திருக்கோவில் 04 காயத்திரி கிராமத்தில் இடம்பெற்று இருந்தது.





இதன்போது சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் என இயற்பெயர் கொண்ட தந்தை செல்வாவின் உருவப்படத்திற்கு அம்பாரை மாவட்ட தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரனால் மலர்மாலை அணிவித்ததைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டு இருந்தவர்கள் மலர் தூபி தமது அஞ்சலிகளை தெரிவித்து இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஸ்ரீ சமாதிப் பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கிருபாகர சர்மாவின் ஆசியுரை இடம்பெற்றதைத் தொடர்ந்து தலைவரின் தலைமையுரையைத் தொடர்ந்து தந்தை செல்வாவின் அரசியல் பயணம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரனால் விசேட உரையும் இடம்பெற்று இருந்தது

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், தமிழரசு கட்சியின் ஐந்தாம் வட்டாரக் கிளை நிருவாக உறுப்பினர்கள் திருக்கோவில் பிரதேச முன்னாள் உறுப்பினர், திருக்கோவில் சபை வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தை வெளிப்படுத்துவதன் அவசியம்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரண்டே நாள்களின் கொழும்பு வருகிறார். இலங்கைக்கான அவரது இந்த நான்காவது பயணத்தில் இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்புத் தொடர்பான முக்கியமான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படும் என்று செய்திகள் வருகின்றன. இந்தியாவும் இலங்கையும் ஒரு பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை இறுதி செய்வதை நெருங்கி, அவர்களின் மூலோபாய கூட்டாண்மையை மேலும் உறுதிப்படுத்துகின்றன என்று இந்தியா சார்பில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கை ஆளும்தரப்புப் பக்கத்திலிருந்து அது தொடர்பான எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

கூட்டு கடல்சார் பாதுகாப்பு, பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் உளவுத்துறை பகிர்வுக்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக எதிர்பார்க்கப்படும் இந்த ஒப்பந்தம், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் (ஹுநுயூ) வளர்ந்து வரும் புவிசார் அரசியல் சவால்களை எதிர்கொள்வதில் ஒரு முக்கியமான படியாக இருக்கும் என்று அரசறிவியல் வல்லுநர்கள் குறிப்பிடுகிறார்கள். இருப்பினும், இந்தியாவுடன் இலங்கை 1987இல் செய்துகொண்ட இந்திய – இலங்கை உடன்படிக்கையை கொழும்பு மதித்துச் செயற்படாத நிலையில் புதிய ஒப்பந்தம் அனைவரது கண்களையும் உறுத்துவதாக அமைந்துள்ளது. அதுவும் இந்திய எதிர்ப்பையே தனது முதன்மை அரசியலாகக் கொண்ட ஒரு தரப்பு ஆட்சியில் இருக்கும்போது இந்த ஒப்பந்தம் கைசாத்திடப்படவுள்ளமை அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இந்தியாவுடன் செய்துகொள்ளப்படவுள்ள ஒப்பந்தங்களில் என்ன இருக்கின்றது என்பதை வெளிப்படுத்துமாறு எதிர்க் கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்துகின்றன. தேசிய இறையாண்மை, வெளிநாட்டு செல்வாக்கு மற்றும் அயலுறவுக் கொள்கையில் பராமரிக்க வேண்டிய நுட்பமான சமநிலை குறித்த கவலைகளை அவை எழுப்பி வருகின்றன.

இந்தியாவும் இலங்கையும் வரலாற்று ரீதியாக ஆழமாக வேரூன்றிய கலாச்சார, பொருளாதார மற்றும் பாதுகாப்பு உறவுகளைப் பகிர்ந்து கொண்டுள்ளன. சமீபத்திய ஆண்டுகளில், நிதி உதவி, எரிசக்தி ஒத்துழைப்பு மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்கள் மூலம் இலங்கையை ஆதரிப்பதில் புது தில்லி தனது பங்கை அதிகரித்துள்ளது. இருப்பினும், சமீபத்திய பாதுகாப்பு ஒப்பந்தம் பொருளாதார ஒத்துழைப்பிலிருந்து வலுவான பாதுகாப்பு உறவுக்கு மாறுவதைக் குறிப்பதாகத் தெரிவிக்கப்படுவது எதிர்க் கட்சிகளை, குறிப்பாக இந்திய எதிர்ப்பு மற்றும் ஆக்கிரமிப்பு மனோநிலையைக் கொண்ட கட்சிகளிடம் அதிக பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியப் பெருங்கடல் புவிசார் அரசியல் போட்டிக்கான ஒரு மையமாக மாறியிருக்கும் நேரத்தில் இந்த ஒப்பந்தம் வருகிறது. குறிப்பாக இலங்கையில் முதலீடுகள் மூலம் சீனாவின் பிரசன்னம் அதிகரித்து வருவது, இந்தியாவிற்கு பாதுகாப்புக் கவலைகளை எழுப்பியுள்ளது. பிராந்திய உறுதிப்பாட்டை உறுதி செய்வதற்கும் வெளிப்புற தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் ஒரு எதிர் நடவடிக்கையாக இந்தக் கூட்டாண்மையை புது தில்லி பார்க்கிறது. இந்த ஒப்பந்தத்தில் இந்தியா இலங்கைப் படைகளுக்கு, குறிப்பாக கடல்சார் கண்காணிப்பில் இராணுவப் பயிற்சி, பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாட ஆதரவை வழங்குவதாகக் கூறப்படுகிறது. ஆனால், தமிழர் தரப்பில் வடக்கு கிழக்கு கடல் எல்லைக்குள் இந்தியர்கள் மீன்பிடிப்பதற்கான உரிமை இந்த ஒப்பந்துடன் தொடர்புபட்டிருக்குமோ என்கிற கவலையை எழுப்பியுள்ளது.

இதற்கு முன்னர் இதுபோன்ற ஒப்பந்தங்கள் இலங்கையை பிராந்திய அதிகாரப் போராட்டங்களுக்குள் தள்ளிவிடும் என்று அரசுத் தலைவர் அநுரகுமார எச்சரித்து வந்திருக்கிறார். இப்போ–து அவரே இந்த ஒப்பந்தத்திற்கு இணங்கியிருப்பது எதிர்க்கட்சிகளின் கண்களை உறுத்துகின்றது. இத்தகைய ஒப்பந்தம் இலங்கையின் நீண்டகால அணிசேரா கொள்கையை ஆபத்தில் ஆழ்த்தக்கூடும் என்றும், நாட்டை அதன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட மோதல்களுக்கு இழுக்கக்கூடும் என்றும் அநுரகுமார முன்னர் கூறியிருக்கிறார். எனவே அவர் எப்படிப்பட்ட ஒப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்பதை அறிய அனைவரும் ஆர்வமாக இருக்கிறார்கள்.

ஆளும்தரப்பு ஒளித்துப் பிடித்து விளையாடாமல் ஒப்பந்தத்தில் இருக்கும் விடயங்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்தவேண்டும். அதனைஅறிந்துகொண்டுஏற்கவும்மறுக்கவும்இலங்கையர்களுக்கு அனைத்து உரிமையும் உண்டு.

இந்திய–இலங்கைபாதுகாப்புஒப்பந்தம்சந்தேகத்திற்குஇடமின்றி பிராந்திய அரசியலில் மிக முக்கியமானதாக இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது. இது அதிக உறுதிப்பாட்டுக்கு வழிவகுக்குமா அல்லது மேலும் சர்ச்சையைத் தூண்டி தேசிய மக்கள் சக்தியின் வீழ்ச்சிக்கு வழிவகுக்குமா என்பதே இப்போதுள்ள கேள்வி. அதற்கு ஒப்பந்தம் வெளிப்படுத்தப்படுவது அவசியம்.

# வசந்த கால நிகழ்வுகள் நுவரெலியாவில் ஆரம்பம்

(கிஷாந்தன்)

2025 ஆம் ஆண்டுக்கான நுவரெலியா வசந்த கால நிகழ்வுகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் நுவரெலியா மத்திய சந்தைக்கு முன்பாக உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டன.

இவ்வாறு ஆரம்பித்த நிகழ்வுகள் இம்மாதம் 30 ஆம் திகதி வரை தொடர்ந்து இடம்பெறவுள்ளன.

நுவரெலியா மாநகரசபை ஆணையாளர் எச்.எம்.பண்டார தலைமையில் வசந்த கால ஏற்பாட்டுக் குழுவின் கலைகலாச்சார நடன நிகழ்வுகளுடன் ஆரம்பமான இவ் வசந்தகால நிகழ்வுகளுக்கு பிரதம அதிதியாக மத்தியமாகாண பிரதான செயலாளர் ஜி. எச்.எம். அஜீத் பிரேமசிங்க உட்பட நுவரெலியா மாவட்ட செயலாளர், நுவரெலியா பிரதேச சபை செயலாளர் , இராணுவ அதிகாரி, பொலிஸ் அதிகாரி, கடற்படை அதிகாரி, விமானப்படை அதிகாரி பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வழக்கம் போல் நுவரெலியா நகரில் உள்ள பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய இசை நிகழ்ச்சியுடனும் பொது அமைப்புகளின் அணிவகுப்பு மரியாதையுடனும் மற்றும் ஊர்திகளின் ஊர்வலத்துடன் கோலாகாலமாக நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந்த ஆரம்ப வைபவத்தில் நுவரெலியா லயன்ஸ் கழகத்தின் அங்கத்தினரின் அணிவகுப்பும், நுவரெலியா சுற்றுலாத் துறையினரின் வாகன அணிவகுப்பும், நுவரெலியா பொலிஸாரின் குதிரை அணிவகுப்பும் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

வருடந்தோறும் நடைபெறும் வசந்த கால கொண்டாடத்தில் தொடர்ந்து வரும் நாள்களில் மலர் கண்காட்சி, படகோட்டம், கார் பந்தய ஓட்டப் போட்டி, குதிரைப்பந்தயம், கிரிக்கெட் சுற்றுப் போட்டி, உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி, கிறகரி வாவியில் நீர் விளையாட்டு, சேற்றில் மோட்டார் ஓட்டம், மோட்டார் சைக்கிள் தடைதாண்டல் போட்டி மற்றும் நாள்தோறும் இசை நிகழ்ச்சிகள் என களியாட்ட விழாக்களும் இந்த வசந்த கால விழாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எனவே நுவரெலியாவிற்கு வருகைதரவிருக்கும் சுற்றுலாபயணிகளின் நன்மைகருதி அத்தியாவசிய தேவைகளை நுவரெலியா மாநகரசபையும் , பயணிகளை பாதுகாப்பதற்கான விசேட சேவையை நுவரெலியா பொலிஸாரும் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, வெளிமாவட்டங்களிலிருந்து நுவரெலியாவிற்கு விசேட போக்குவரத்து பஸ் சேவை நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.







# கிளிநொச்சி மாவட்டத்திற்கான நீர் வழங்கல் திட்டத்திற்கு அனுமதி

உலக வங்கியின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்திற்கான பாரிய நீர் வழங்கல் திட்டத்திற்கு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் போதே மேற்படி திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் நீரியியல் வழங்கல் அமைச்சர் இ.சந்திரசேகசகர் தலைமையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுகூட்டத்தில்வடக்குமாகான ஆளுநர் நா. வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. சிறிதரன், இராமநாதன் அர்சுனா, இளங்குமரன், ரஜீவன், ஆகியோருடன் கிளிநொச்சி அரச அதிபர் முரளிதரன், பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளி ட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தின் போது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி மாவட்ட பொறியியலாளர். எஸ். சாரங்கன் வட்டக்கச்சி நீர் வழங்கல் திட்டம், கண்டாவளை கிராமிய நீர் வழங்கல் திட்டம், இரணைமாதாநகர் கிராமிய நீர் வழங்கல் திட்டம், மற்றும் பாரிய கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம் போன்ற திட்டங்களுக்கான அனுமதிக்கு சமர்பித்திருந்தார். இதனை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அதற்கான அனுமதியினை வழங்கியுள்ளது.

கிளிநொச்சி நகரத்தின் விரைவான நகரமயமாக்கல், முன்மொழியப்பட்ட பரந்தன் கைத்தொழில் வலயம் மற்றும் அறிவியல்நகர் கைத்தொழில் வலயம் ( பல்கலைகழகம் மற்றும் ஆடைத்தொழிற்சாலைகள் உள்ளிட்ட நிறுவனங்கள், தொழிறசாலைகள்) உட்பட அபிவிருத்தி அடைந்து வரும் கைத்தொழில் துறையினையும் கருத்தில் கொண்டு அதற்கான உட்கட்டுமான வசதிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற வகையில் பாரிய கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்திற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி, மக்களின் வாழ்க்கை தர முன்னேற்றம் முக்கியமாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் என்பவற்றுக்கு கைத்தொழில் வலயங்களின் அவசியம் கருத்தி தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதளை ஊக்குவிக்கும் பொருட்டு அதற்கான நீர் மின்சாரம், போக்குவரத்து போன்ற உட்கட்டுமான

வசதிகளைஏற்படுத்திக்கொடுப்பதனைஅடிப்படையாக கொண்டுள்ளதோடு, கண்டாவளை பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களில் 2 வீதமானவர்கள் சிறு நோயால் பாதிக்கப்பட்டுள்ளயினை கவனத்தில் எடுத்தும் மேற்படி நீர் வழங்கல் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# மக்களின் 1200 ஏக்கர் காணி கிளிநொச்சியில் முப்படைகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன

## வடமாகாண காணி உரிமைக்கான மக்கள் அமைப்பு தெரிவிப்பு

கிளிநொச்சிமாவட்டத்தில்1209.22ஏக்கர்மக்களின் காணிகளை முப்படையினரும் கையகப்படுத்தி வைத்திருக்கின்றார்கள் என வடமாகாண காணி உரிமைக்கான மக்கள் அமைப்பின் தலைவர் இரத்தினசிங்கம் முரளிதரன் தெரிவித்துள்ளாார்.

இராணுவத்தினர் வசமுள்ள காணி தொடர்பில் கேட்ட போதே அவர் நேற்று (செவ்வாய்க்கிழமை) இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களது காணிகள் பல விடுவிக்கப்படாது இராணுவத்தினர் வசம் காணப்படுகின்றன. அந்தவகையில், கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 653.65 ஏக்கரும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 180.38 ஏக்கரும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 116.61ஏக்கரும், பூநகரி பிரதேசசெயலர் பிரிவில் 248.18 ஏக்கரும் என 1209.22 ஏக்கர் காணி இராணுவம் வசமுள்ளது.

மக்களின் காணிகளை முப்படையினரும் கையகப்படுத்தி வைத்திருக்கின்றனர். மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படவேண்டும் என்பதே காணி உரிமைக்கான மக்கள் அமைப்பின் வேண்டுகோள் எனவும் அவர் தெரிவித்தார்.

100



# கற்பிட்டியைச் சேர்ந்த ஹாரிஸ் உம்ரா கடமையின்போது இறப்பு

(சியாஜ்)

கற்பிட்டி சின்னக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் பெரிய குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் இலங்கை வங்கியின் நுரைச்சோலை கிளை முகாமையாளர் எம்.சீஎம் ஹாரிஸ் தனது 70 வயதில் புனித உம்ரா கடமையைநிறைவேற்றசென்றிருந்த போது மக்காவில் காலமானார்.



ரமழான் மாதத்தின் இறுதி பத்து நாள்களை இஹ்திகாப் உடன் மக்காவில் அமல்களைக் கொண்டு சிறப்பிக்கும் முகமாக உம்ராபயணம் சென்றிருந்த எம்.சீஎம் ஹாரிஸ் உம்ரா பயணத்தின் இறுதி தருவாயில் சிறு சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் காலமாகியுள்ளார்.

அன்னாரின் ஜனாஸா திங்கட்கிழமை இலங்கையின் நோன்புப் பெருநாள் தினத்தில் மக்காவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர், கற்பிட்டி பெரியஜும்ஆபள்ளிவாசலின் முன்னாள் பொருளாளரும், கற்பிட்டி ஸகாத் ஒன்றியத்தின் முக்கிய பொறுப்பு வகித்தவரும், பெரியகுடியிருப்பு பகுதியின் மார்க்க பணிகளில் முக்கிய பங்கு வகித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நினைவு நாளும் நினைவுப் பேருரையும்

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகர் அமரர் அருட்கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகளாரின் நான்காவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு இல.286, பிரதான வீதி ,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் திருமறைக் கலாமன்றத்தால் நினைவுப் பேருரை நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றஇந்நிகழ்வில்,நினைவுப்பேருரையை 'அழகியல் : ஓர் ஆன்மீக நோக்கு நிலை' என்னும் பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியரும் நுண்கலைத்துறை முன்னாள் தலைவருமான கலாநிதி திருமதி ஏ.என்.கிருஷ்ணவேணி ஆற்றினார்.

# சிறை அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல்

அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ள சிறைச்சாலை அதிகாரிகள் தொடர்பான அறிக்கை ஒன்று பதில் பொலிஸ் மா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையை புலனாய்வு பிரிவுக்கும் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ள அதிகாரிகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்காக, சம்பந்துப்பட்ட அறிக்கையைபதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவிடம் சமர்ப்பித்ததாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

களுத்துறை, காலி, பூஸ்ஸ மற்றும் மாத்தறை சிறைச்சாலைகளில் பணியாற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் உயிருக்கு அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளதாகவும், இது தொடர்பாக பரிசீலித்து சம்பந்தப்பட்ட அறிக்கை வழங்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

எனினும், அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை அடையாளம் காணப்படவில்லைஎன்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்மீமன தலகஹ பிரதேசத்தில் முன்னாள் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும், சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பிற்காக இதுவரை துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. நீண்ட காலமாக சிறைச்சாலை அதிகாரிகள் பல்வேறு உயிர் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக, போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய சிறைக்கைதிகளை காவலில் வைத்திருக்கும் அதிகாரிகளுக்கு உயிருக்கு அச்சுறுத்தல்கள் உயர் மட்டத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




# கௌரவிப்பு

(சியாஜ்)

புத்தளம் - ரத்மல்யாய ,முல்லை ஸ்கீம் நூரானிய்யா ஜும்மா மஸ்ஜிதில் மதரஸா மாணவர்கள், உலமாக்கள் மற்றும் ஹிஸ்புல் குர்ஆன் நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்கள் திங்கட்கிழமை கௌரவிக்கப்பட்டனர்.

புனித நோன்புப் பெருநாள் தொழுகையை அடுத்து முல்லை ஸ்கீம் நூரானிய்யா ஜும்ஆ மஸ்ஜித் நிர்வாக தலைவர் அப்துல் வதூத் மௌலவி தலைமையில் இந்த கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

புனித ரமழான் மாதம் முழுவதும் தராவீஹ் மற்றும் நோன்பின் இறுதிப் பத்தில் கியாமுல் லைல் ஆகிய தொழுகையினை நடத்திய உலமாக்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

நூரானிய்யா ஜும்ஆ மஸ்ஜித் பேஷ் இமாம் அஷ்ஷெய்க் எம்.ஆர்.எம்.சப்ரின் (மிஸ்பாஹி), அஷ்ஷெய்க் அல் - ஹாபில் ஏ.டபிள்யூ. பஸ்லுல் ஹக் முப்தி (தீனி), அஷ்ஷெய்க் எம்.ரி.அஸ்லம் (ஷாபிஈ), அஷ்ஷெய்க் அல் - ஹாபில் எம்.ஆர்.எம்.அம்மார் (நூரி) ஆகிய உலமாக்களும் நூரானிய்யா ஜும்ஆ மஸ்ஜிதில் கடமைபுரியும் முஅத்தின் வை. அல்ஹாக் ஆகியோர் இதன்போது விஷேட கொடுப்பனவுகள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு, மார்க்க கல்வியை நிறைவு செய்த அஷ்ஷெய்க் யு.எம்.றுஸ்தி (முஹாஜிரி) இதன்போது அன்பளிப்பு மற்றும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேலும் , குறித்த மஸ்ஜிதில் புனித ரமழான் மாதம் முழுதும் தராவீஹ் தொழுகையின் பின்னர் இடம்பெற்ற ஹிஸ்புல் குர்ஆன் ஓதிய மாணவர்களை கௌரவிக்கும் முகமாக புத்தளம் ஜமியத்துல் உலமா சபையினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளும் அந்தந்த மாணவர்களின் பெற்றோர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை, முல்லை ஸ்கீம் கிராமத்திலிருந்து பல மாணவர்கள் மதரஸாவில் மார்க்கக் கல்வியை கற்றுக்கொண்டிருக்கும் நிலையில் எதிர்காலத்தில் ஹாபில்களாக, உலமாக்களாக வெளியேறவுள்ள அந்த மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக அன்பளிப்புகள் மற்றும் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

முல்லை ஸ்கீம் கிராமத்தை சேர்ந்த நலன் விரும்பிகள் சிலர், உலமாக்கள் மற்றும் மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையை அன்பளிப்பாக வழங்குவதற்கு நிதி உதவியை வழங்கியுள்ளனர்.

மேலும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினரும், புத்தளம் பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான தேசகீர்த்தி ரிபாஸ் நஸீரின் முயற்சியால் பரிசில்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







காலைக்கதிர் Kalaikkathir

# பேரா. ஆசி.கந்தராஜாவின் பவள விழா சிட்னியில்

(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

சிட்னியில் பிரபல எழுத்தாளரும், பேராசிரியருமான ஆசி. கந்தராஜாவின் பவள விழா கடந்த சனிக்கிழமை சிறப்புற நடைபெற்றது.

தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியின் முன்னாள் மாணவரான பேராசிரியர் ஆசி. கந்தராஜா, தமிழ் இலக்கியத்திற்கும், தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பினை கௌரவிக்கும் முகமாக சிட்னித் தமிழ் இலைக்கிய ஆர்வலர்கள் அமைப்பு இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

இவ்வாண்டு தனது பவளவிழாவை கொண்டாடும் பிரபல எழுத்தாளரும், பேராசிரியருமான ஆசி. கந்தராஜாவுக்கு சிட்னியில் பிளாக்டவுண் உயர்தர ஆண்கள் பாடசாலை வளாகத்தில் பெருந்திரளான தமிழ் இலைக்கிய ஆர்வலர்களால் கௌரவிப்பு விழா சிறப்புற நடைபெற்றது.

பெருந்திரளான மக்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வை தமிழ் இலக்கிய ஆர்வலரான திருநந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. அத்துடன் திருமதி சௌந்தரி கணேசன், நரேன் நரேந்திரநாதன், நாகேந்திரம், சட்டத்தரணி ரவீந்திரன், திருமதி இந்துமதி சிறிநிவாசன், பேராசிரியர் பிரவீணன் மகேந்திரன், டாக்டர் வாசுகி சித்ரநேசன் மற்றும் பலர் சிறப்புரை ஆற்றினார்கள்.

புகலிட தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ் பாடசாலைகளில் தமிழ் மொழி தழைத்தோங்கவும் நீண்டகாலமாக ஆஸ்திரேலியாவில் பேராசிரியர் ஆசி. கந்தராஜா பெரும் பணி ஆற்றி வருகிறார். உயிரியல் தொழில்நுட்பவியல், விவசாயம், தாவரவியல் பூங்கனியியல்,

துறைகளில் பட்டப்படிப்பு மற்றும் முனைவர் பட்ட ஆய்வுகளை நிறைவு செய்து பின்னாளில் பேராசிரியராக சிட்னி பல்கலைக்கழகங்களில் பேராசிரியராக பணயாற்றியவர். அத்துடன் இலங்கை, உட்பட சில நாடுகளிலும் வருகை தரு பேராசிரியராக பணியாற்றி வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தாயக மண்ணின் வாசத்தை நினைவூட்டும் பேராசிரியர் ஆசி. கந்தராஜாவின் படைப்புக்கள் பல விருதுகளையும் பெற்றுள்ளது. தமிழ் அறிவியல் இலக்கியத்தின் முன்னோடியாக திகழும் பேராசிரியர் ஆசி. கந்தராஜா இளம் பராயத்தில் கிழக்கு ஜேர்மனி பல்கலைக்கழகத்தில் புலமைப்பரிசில் பெற்று அங்கு உயர்கல்வியை பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு ஜேர்மனியில் தான் கற்றகாலத்தில் 1970 களில் பெற்றுக்கொண்ட அரசியல் அனுபவங்களை பல வருடங்களுக்குப் பிறகு, 'அகதியின் பேர்ளின் வாசல்' என்ற நாவல் சர்வதேச அரங்கில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

அத்துடன் பேராசிரியர். ஆசி. கந்தராஜாவின் சில சிறுகதைகள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் வெளிவந்துள்ளன.

சிட்னியில் நிகழ்ந்த பேராசிரியர் ஆசி. கந்தராஜாவின் பவள விழாவில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு தங்களது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் பேராசிரியருக்கு தெரிவித்துக் கொண்டனர்.












# உலக சந்தைக்கு ஏற்ப எரிபொருள் விலைகள் குறைக்கப்படவில்லை

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

உலக சந்தையில் பெருமளவில் எரிபொருள் விலைகள் குறைவடைந்துள்ள போதிலும், இங்கு 10 ரூபாய் மாத்திரமே குறைக்கப்பட்டுள்ளது. நடைமுறையிலுள்ள விலை சூத்திரத்துக்கமைய விலைகள் குறைக்கப்படவில்லை. எரிபொருள் விலை திருத்தத்தில் ஆளும்தரப்பு தொடர்ச்சியாக மக்களை ஏமாற்றிக்கொண்டிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலக சந்தையில் எரிபொருள் விலைகள் பெருமளவில் குறைவடைந்துள்ளன. அவ்வாறிருக்கையில் இலங்கையில் 10 ரூபாவால் மாத்திரமே விலை குறைக்கப் பட்டுள்ளது.

நடைமுறையிலுள்ள விலை சூத்திரத் துக்கமைய விலைகள் குறைக்கப்படவில்லை. பெற்றோல், டீசல் விலைகள் குறைக்கப்பட்டுள்ள போதிலும், வறுமை நிலையிலுள்ள பெருந்தோட்ட மக்கள் போன்றோர் அதிகளவில் பயன்படுத்தும் மண்ணெண்ணெய் விலைகள் குறைக்கப்படவில்லை.

10 ரூபாவால் விலைகளைக் குறைத்துவிட்டு அதனைப் பெருமையாகக் கூறுகின்றனர். எந்த சூத்திரத்தின் அடிப்படையில் இந்த விலை குறைப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன? கடந்த இரண்டு மாதங்களில் எரிபொருட்களின் விலைகள் உலக சந்தையில் வீழ்ச்சியடைந்த போதிலும், நாட்டில் அதனை நடைமுறைப்படுத்த ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவில்லை. 10 ரூபாய் விலை குறைப்பை எந்த வகையிலும் மக்களால் அனுபவிக்க முடியாது.

6 மாதங்களில் நாட்டை மாற்றிக் காட்டுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவர் கூறியதைப் போன்று உள்ளதுவொரு மாற்றமும் இடம்பெறவில்லை. எனவே இனியும் மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளதாக அவர் கூறும் கற்பனைக் கதைகளை நம்புவதற்கு மக்கள் தயாராக இல்லை. எனவே உள்ளூராட்சிமன்றங்களின் அதிகாரங்களை மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வழங்கப் போவதில்லை.

ஐக்கியதேசியகட்சியுடன் இணக்கப்பாட்டை எட்டவேண்டும் என்ற யோசனை ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுவில் முன்வைக்கப்பட்டது. எனினும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வேலைப்பளு காரணமாக அந்த பேச்சுவார்த்தைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது. எனவே தேர்தலின் பின்னர் மீண்டும் இது குறித்து அவதானம் செலுத்தப்படும் என்றார்.

### பொலிஸ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டப்பட்டுள்ளன.

இதனால் அவரைப்பற்றிய விசாரணையை தீவிரமாக மேற்கொண்டோம். விசாரணையின் முடிவில், அவர் தீவிரவாத நோக்கங்களைக் கொண்டவராக இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டதால் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் கூறினார்.

"இவர் உலமா சபையில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது உலமா சபை உண்மையில் அவர் ஒரு சாதாரண முஸ்லிமின் நிலையைத் தாண்டிய நிலை இருக்கிறார் எனவும், அவருக்குப் புனர்வாழ்வளிக்கப்படவேண்டும்" என்றும் கூறினர் எனவும் தெரிவித்தார்.

தற்போது தீவிரவாத விசாரணைப்பிரிவில் அவரை 90 நாட்கள் வரை தடுப்புக் காவலில் வைத்திருக்க பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் உறுதிப்படுத்தினார்.

### முஸ்லிம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்முறைக்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டைக்கொண்ட ஒருநாடாகும். இந்த வகையில் நாம் தன்னாதிக்கம் கொண்ட சுதந்திர பாலஸ்தீன நாடொன்றின் உருவாக்கத்தை மீண்டும் இங்கு வலியுறுத்துகின்றோம்.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மையில் பலஸ்தீனத்தில் நடைபெறும் அத்துமீறல்களைக் கண்டிக்கும் வகையில் ஒரு சுவரொட்டியை- (ஸ்டிக்கரை) ஒட்டியதற்காக இளைஞன் கைது செய்யப்பட்டதாக வெளிவந்த செய்திகள் சமூகத்தை பெரிதும் கவலைக்குள்ளாக்கியுள்ளது. நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கோ அல்லது சமூக ஒருமைப்பாட்டிற்கோ அச்சுறுத் தலாக இல்லாதவரை, ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதையும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும்போது அதிகாரிகள் குறித்த உரிமைகளை உறுதி செய்ய வேண்டும் என்பதையும் ஜம்இய்யா வலியுறுத்துகின்றது.

நமது பிரதிநிதிகள் இந்தக் கைது சம்பந்தமாக காவல்துறையினரை தொடர்புகொண்டபோது, சுவரொட்டி காரணமாக மாத்திரமே குறித்த இளைஞர் கைது செய்யப்படவில்லை என்றும் கூடுதல் காரணங்கள் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இந்நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான உத்தியோகபூர்வ பதிவுகளை ஜம்இய்யா கோரியுள்ளது. அவற்றை நமது செயற்குழு ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

நமது நாட்டின் அனைத்து பிரஜைகளும் தங்கள் கருத்துக்களை பொறுப்புடன் வெளிப்படுத்த வேண்டும் என்றும் தேசிய ஒற்றுமையையும் பாதுகாப்பையும் பாதிக்காதவாறு செயற்பட வேண்டும் என்றும் நாங்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.

இந்த விவகாரத்தை சட்ட ரீதியாகவும் நியாயமாகவும் தீர்க்கும் வகையில் ஜம்இய்யா சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனும் சட்ட வல்லுநர்களுடனும் இணைந்து ஆலோசித்து வருகின்றது என்பதையும் மேலதிக தகவல்கள் கிடைக்க பெற்றவுடன், தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் இங்கு தெரிவித்துக்கொள்கிறோம் - என்றுள்ளது.

### பெற்றோல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்மசேகர, முச்சக்கரவண்டி கட்டணங்களைக் குறைப்பதைவிட, முறையான ஒழுங்குமுறை மூலம் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ள சேவையை வழங்க ஆளும்தரப்புத் தலையிடவேண்டும் என்று கூறினார்.

கட்டணங்களை நிர்ணயிப்பதற்கான முறையான முறை இல்லாததால், நாடு முழுவதும் இயக்கப்படும் முச்சக்கர வண்டிகளுக்கு பல்வேறு கட்டணங்கள் வசூலிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, ஜூலை மாதத்தில் பஸ் கட்டணம் நிச்சயமாக கணிசமானளவில் அதிகரிக்கும் என்று, இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

பஸ்கள் தற்போது 3 ரூபா நட்டத்தில் இயக்கப்படுவதாகவும் அவர் கூறினார். "எதிர்வரும் சிங்களப் புத்தாண்டில் டீசல் விலை குறைக்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால், நமக்கு இன்னும் இரண்டு மாதங்கள் மட்டுமே உள்ளன என்பதை நான் பொறுப்புடன் சொல்ல முடியும். வருடாந்த பஸ் கட்டணம், குறிப்பாக ஜூலை. ஜூன் மற்றும் ஏப்ரல் மாத இறுதியில் மாறுகிறது. எனவே, , ஜூலை மாதத்தில் பஸ் கட்டணம் நிச்சயமாக கணிசமான அளவில் அதிகரிக்கப்படும்.

இந்த விடயம் குறித்து இரண்டு வாரங்களுக்கு முன்பு போக்குவரத்து அமைச்சருடன் விவாதித்தோம். இதைநாங்கள் அவருக்கு நேரடியாகத் தெரிவித்தோம். இருப்பினும், ஜூலை மாதத்திற்குள் பஸ் கட்டண உயர்வை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்" என்றார்.

### எரிபொருளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருள் விலையை குறைக்க வேண்டும் என்று நாங்களும் விரும்புகிறோம். ஆனால் இப்போதைக்கு அதைச் செய்ய வழியில்லை. ஏனென்றால், நாங்கள் இன்னும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுடன் இருக்கிறோம். எங்கள் வருமானத்தையும் செலவையும் ஆராய வேண்டியிருக்கிறது. ஆளும்தரப்பிற்கு வருமானம் இருக்கவேண்டும். ஒரேயடியாக விலையைக் குறைப்பது கடினம். நாங்கள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பக்கம் செல்ல வேண்டியிருக்கிறது. அதனால்தான் இந்திய பிரதமர் இங்கு வரும்போது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான ஒப்பந்தங்களை நோக்கியே செல்லவுள்ளோம்.

அப்படி சென்றுதான் எங்களால் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க முடியும். எரிபொருளுடனும் எங்களுக்கு ஒரு சமநிலைப்படுத்தல் செய்யவேண்டியிருக்கிறது. இதை சர்வதேச நாணய நிதியம் அறிந்திருக்கிறது. ஒரேயடியாக அந்த இடத்திற்கு செல்லமுடியாது. ஆனாலும், ஆட்சிக்கு வந்த பிறகு நாங்கள் பலமுறை எரிபொருள் விலையை குறைத்திருக்கிறோம். இந்தமுறை 10 ரூபாவால் குறைத்திருந்தாலும், இதற்கு முன்பும் பல்வேறு அளவுகளில் விலையை குறைத்துள்ளோம் - என்றார்.

### அரைவாசி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஆரம்பமாகியது.

சித்திரை வருடப்பிறப்பின்போது மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் இந்தத் திட்டம் ஏப்ரல் 13 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும்

5,000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய பொதியை 50 வீத விலைக்கழிவுடன் 2,500 ரூபாவுக்கு பெற்றுக்கொள்ள முடியும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

'லங்கா சதொச' ஊடாக பெற்றுக்கொள்ள முடியாத பகுதிகளிலுள்ள பயனாளிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட கூட்டுறவு விற்பனை நிலையங்கள் ஊடாக இந்த சலுகைப் பொதி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும பயனாளிகளாகப் பதிவுசெய்யப்பட்டு காத்திருப்போர் பட்டியலிலுள்ள குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றிற்காக நிதியமைச்சு மற்றும் உணவுப் பாதுகாப்பு குழு மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

### தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கே.பி.பெர்னாண்டோ ஆகிய நீதிபதிகள் அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட பல பிரதேச சபை நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சக்தி, சுயாதீன குழுக்கள் உள்ளிட்ட தரப்பினரால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் சுமார் 30 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

### சாமர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க ஏப்ரல் 27 கைது செய்யப்பட்டார்.

நிதி மோசடிக் குற்றச்சாட்டுகளின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராக 3 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் முதல் 2 வழக்குகளுக்கும் பிணை வழங்கப்பட்டாலும் மற்றுமொரு வழக்கிற்காக விளக்கமறியல் நீடிக்கப்பட்டிருந்தது.



காலைக்கதிர்
Kalaikkathir

# உள்ளாட்சி தேர்தல் 2025

## திட்டமிட்டு வடக்கு கிழக்கை இரவோடிரவாக பிரித்தவர்கள்தான் இன்றைய ஆட்சியாளர்கள்

### தமிழ் அரசுக் கட்சி காரைதீவு செயலாளர் குற்றச்சாட்டு

(பாறுக் ஷிஹான்)

றோகண விஜயவீரவின் பெறாமகன்கள் இங்கே உலாவிக்கொண்டு இருக்கின்றார்கள். அரசாங்கம் திட்டமிட்டு வடக்கு கிழக்கை இரவோடு இரவாக பிரித்தவர்கள். யாழ்ப்பாண மண்ணும் கிழக்கு மண்ணும் ஒன்றாக இருக்க கூடாது என கங்கணங்கட்டி முன்னாள் அமைச்சர் அதாவுல்லாஹ் உட்பட இரவோடு இரவாக வழக்கின் தீர்ப்பை கொண்டு வந்து உயர்நீதிமன்றத்தில் வடக்கு கிழக்கை பிரித்து பிளந்த வரலாறு தொடர்பில் தற்போது எம்மிடையே நடமாடுகின்ற தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்களுக்கு தெரியப்படுத்துக்கள். இன்றுடன் 6 மாதங்கள் கடந்தவிட்டன. தேர்தல் காலங்களில் எத்தனை வாக்குறுதிகளை அவர்கள் அள்ளி வழங்கினார்கள் என்று சிந்துத்துப் பாருங்கள். என காரைதீவு இலங்கை தமிழரசு கட்சி கிளை செயலாளர் கதிர்காமத்தம்பி செல்வபிரகாஷ் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் காரைதீவு கிளை தலைமையிலான பிரதேச சபை வேட்பாளர் அறிமுக நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை விவேகானந்தா விளையாட்டுக் கழக மண்டபத்தில் நடைபெற்ற வேளை அங்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

எமது வீரபோராட்டத்தை இடைநடுவில் துரோகம்செய்தவிட்டு கடந்தநாடாளுமன்றதேர்தலில் அம்பாறைமாவட்ட மண்ணிற்கு வந்து மஹிந்த ராஜபக்ஷவின் அஜந்தாவில் எங்களுக்கு பல வியாக்கியானங்களை சொல்லி அம்பாறை மாவட்ட இளைஞர்களை அடிமுட்டாள்கள் ஆக்கி சென்றுவிட்ட கருணா என்பவர் இந்த கிழக்கு மண்ணின் மைந்தன், எமது பொக்கிஷம் இன்று நாங்கள் கண்ணியத்துடனும் கவனத்துடனும் பார்த்துக் கொண்டிருக்கின்ற எமது அருமைத்தம்பி சாணக்கியனை சிறையில் அடைக்க வேண்டும் என்று கூறுகின்றார். இவருக்கு என்ன அருகதை இருக்கின்றது.

இந்த துரோகி கருணாவிற்கு வடக்கு கிழக்கு மக்கள் சிறந்த பாடத்தை புகட்ட வேண்டும். எமது கட்சி என்பது நேற்று முளைத்த காளான்கள் அல்ல. இந்த நாட்டில் பரம்பரை பரம்பரையாக 1948 ஆண்டு உருவாக்கப்பட்ட பெரும் வரலாற்றைக்கொண்ட மாபெரும் சக்தி எங்கள் கட்சியாகும். இன்று எமது அன்புத்தம்பி சாணக்கியன் கடந்த காலங்களில் எமது தலைவர்கள் நாடாளுமன்றத்தில் பல மொழிகளில் உரையாற்றியது போன்று இன்று பேரினவாத சக்திகளுக்கு பதில் கொடுத்துக்கொண்டிருக்கின்றார். அழகாக அவர்களது சிங்கள மொழியில் பதில் வழங்கி கொண்டு இருக்கின்றார்.அழகாக ஆங்கில மொழியில் பதில் கொடுத்து கொண்டிருக்கின்றார்.

அழகாக மட்டக்களப்பு தமிழில் பதில் வழங்கி கொண்டிருக்கின்றார்.தம்பி சாணக்கினை பற்றி எவரும் எதுவும் சொல்லலாம். நான் பெருமைப்படுகின்றேன். இளம் இரத்தம் துடித்துக்கொண்டிருக்கின்றது. நாங்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டிய காலத்தேவை இருக்கின்றது. இன்று ஆட்சிபீடம் ஏறி இருக்கின்ற இந்த அரசாங்கம் திட்டமிட்டு வடக்கு கிழக்கை இரவோடு இரவாக பிரித்தவர்கள். யாழ்ப்பாண மண்ணும் கிழக்கு மண்ணும் ஒன்றாக இருக்க கூடாது என கங்கணங்கட்டி முன்னாள் அமைச்சர் அதாவுல்லாஹ் உட்பட இரவோடு இரவாக வழக்கின் தீர்ப்பை கொண்டு வந்து உயர்நீதிமன்றத்தில் வடக்கு கிழக்கை பிரித்து பிளந்த வரலாறு தொடர்பில் தற்போது எம்மிடையே நடமாடுகின்ற தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்களுக்கு தெரியப்படுத்துக்கள். இன்றுடன் 6 மாதங்கள் கடந்தவிட்டன. தேர்தல் காலங்களில் எத்தனைவாக்குறுதிகளை அவர்கள் அள்ளி வழங்கினார்கள் என்று சிந்துத்து பாருங்கள். இந்த அரசாங்கத்திடம் தற்போதைய எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயநிரணய உரிமை பற்றி கேட்கின்றார்கள்.

அவர்களிடம் உரிய பதில் இல்லை.மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் எங்களை முன்னின்று கொன்றார்கள்.ஆனால் இவர்கள் தலைமைய தடவி செவியை புடுங்குகின்றார்கள். எதிர்வரும் பிரதேச சபைத் தேர்தலில் எம்மை நாமே ஆள வேண்டும். இந்த நாட்டினுடைய அரசாங்கம் எங்க வேண்டுமானாலும் இருக்கட்டும். எங்கள் ஆளுகையை அதிகாரங்களை நாங்கள் தான் ஆள வேண்டும். எனவே தான் வடக்கு கிழக்கில் உள்ள சகல சபைகளையும் தமிழரசுக் கட்சி கைப்பற்றும் என உறுதிபடக் கூறுகின்றேன்.

எனவே இந்த தேர்தலை மிகக்கவனமாக எல்லோரும் நோக்க வேண்டும். றோகண விஜயவீரவின் பெறாமகன்கள் இங்கே உலாவிக்கொண்டு இருக்கின்றார்கள். இன்று இந்த ஜேவிபியை சிங்கள மக்கள் விமர்சித்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள். ஏதோ மக்கள் அன்று சிந்தித்தார்கள். வேறு தெரிவில்லைவாக்களித்தார்கள். இன்று ஏன் வாக்களித்தோம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே நாங்கள் சிந்திக்க வேண்டும். எமது சபையை நாங்கள் கைப்பற்ற வேண்டும். – என்றார்.

இந்த நிகழ்வில் விஷேட அதிதிகளாக இலங்கைதமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கவீந்திரன் கோடீஸ்வரன், இராசமாணிக்கம் சாணக்கியன், ஞா.ஸ்ரீநேசன், சி.ஸ்ரீநாத் ஆகியோர் உட்பட இலங்கைதமிழரசுக்கட்சிகாரைதீவுபிரதேசசபைவேட்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.




## ஆலய வழிபாட்டுடன் நெடுந்தீவில் 8 வட்டாரங்களிலும் துரித பரப்புரை

### தமிழ் அரசுக் கட்சி நேற்றுத் தொடங்கியது

நெடுந்தீவு பிரதேச சபைக்கான தேர்தல் பரப்புரைகளைநெடுந்தீவுஐயனார்ஆலயத்தில் சமய வழிபாட்டுடன் ஆரம்பித்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நெடுந்தீவு ஜே/01கிராமிய சேவையாளர் பிரிவில் முதலாம் வட்டாரத்தில் இப்பரப்புரைபணிகள்முன்னெடுக்கப்பட்டவை குறிப்பிடத்தக்கது



நெடுந்தீவு ஐயனார் ஆலயத்தில் நேற்றுக் காலை விசேட வழிபாடுகளுடன் தனது பரப்புரையைத் தொடங்கியது தமிழ் அரசுக் கட்சி.

நெடுந்தீவின் எட்டு வட்டாரங்களில் தமிழ் அரசுக் கட்சி சூறாவளிப் பரப்புரைகளில் நேற்று ஈடுபட்டது.

இலங்கைத்தமிழரசுக்கட்சியின்நெடுந்தீவு பிரதேச சபைக்கான வேட்பாளர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரனும்பரப்புரைகளில்கலந்துகொண்டார்.

வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.பரப்புரைக்—கூட்டங்களில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்ததாவது:

"கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக நெடுந்தீவு பிரதேச சபை வேறு சிலரின் கைகளிலேயே இருந்தது. சபையின் அரச சொத்துக்களை சொந்தப் பாவனைக்காக அவர்கள் பயன்படுத்தினர். 35 ஆண்டுகளிலும் இந்த பிரதேச வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. மக்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த பிரதேசத்துக்கான ஒதுக்கீடுகள் காணாமல்போகும்அளவுக்கானநிலைமைகள் காணப்படுகின்றன.

2018 தமிழ் அரசுக் கட்சி இங்கு வெற்றி பெற்றிருந்தபோதும் போதிய பெரும்பான்மை இல்லாத காரணத்தால் ஆட்சியை இழக்கவேண்டிய ஏற்பட்டது.

இம்முறை நெடுந்தீவு பிரதேச சபை நெடுந்தீவு மக்களால் ஆளப்படவேண்டும். அதற்கு நீங்கள் எமக்கு பெரும்பான்மை பலத்தை வழங்க வேண்டும். தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, நிரந்தரமான அரசியல் தீர்வு, வாழ்வுக்கான போராட்டம் ஆகியவற்றுக்கான தீர்வாக சமஸ்டி அரசியலமைப்பை கோருகின்ற இலங்கைத் தமிழ அரசுக் கட்சியின் கொள்கைக்கு அமைவாக அடிப்படைஅலகானஉள்ளூராட்சி மன்றங்கள் எமது கைகளுக்கு வரவேண்டும்.

எமக்கு நடந்தது இனப்படுகொலை என்பதை சர்வதேச சமூகத்துக்கு சொல்ல வேண்டுமென்றால் நாம் இந்த சபையை வெற்றிகொள்ளவேண்டும். காணாமலாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் உள்ள எமது மக்களுக்கு ஒரு சர்வதேச நீதி கிடைக்கவேண்டும் என்றால் நெடுந்தீவு பிரதேச சபை எமிடம் இருக்க வேண்டும். பறிக்கப்பட முடியாத அதிகாரங்களோடு இந்த நாட்டில் கௌரவமான வாழ்வு வாழ்வதற்கான அதிகாரமான சமஷ்டி அதிகாரத்தை பெற வேண்டும் என்றால் நெடுந்தீவு பிரதேச சபை எமிடம் இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.



## தமிழ் அரசு வேட்பாளர் வீடு மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திக்கோடை பகுதியில் உள்ள இலங்கை தமிழரசுக்கட்சியின் வேட்பாளரின் வீட்டின் மீது திங்கட்கிழமை இரவு பெற்றோல் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இம்முறை உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போரதீவுப்பற்று பிரதேச சபைக்காக போட்டியிடும் அருள்ராஜா பிரேமாகரன் என்பவரின் வீட்டின் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த நபர் திங்கட்கிழமை இரவு மரண வீடு ஒன்றுக்கு சென்றிருந்த நிலையில் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அந்தநேரத்தில் வீட்டில் மனைவி, பிள்ளைகள் உறங்கிக்கொண்டிருந்தனர் எனவும் பிரேமாகரன் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் காரணமாக வீட்டிலிருந்தயாருக்கும்எந்தஆபத்தும் ஏற்படவில்லையென வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வெல்லாவெளி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டதை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வீட்டின் கூரையின் மீது இந்த தாக்குதல் நடாத்தப்பட்டுள்ள நிலையில் வீட்டின் உட்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சீற் எரிந்துள்ளதாகவும் வேறு சேதங்கள் ஏற்படவில்லையெனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

# உள்ளாட்சி தேர்தல் 2025

## பேரினவாத கட்சிகளுக்கு வாக்களிக்காமல் எமது இருப்பை பாதுகாக்க முன்வாருங்கள்

### கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

காரைதீவு மண் என்பது அழிவின் விளிம்பில் இருக்கின்றது. தேசிய கட்சிகள் காரைதீவு பிரதேச சபையினை இம்முறை, தமிழர்கள் கைப்பற்றக்கூடாது என கூறி எம்மில் சிலரை மூளைச்சலவை செய்து தமிழரசுக்கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் என கூறுகின்றார்கள். வடக்கு கிழக்கில் முதல் முதலாக திருவுளச்சீட்டின் ஊடாக காரைதீவு பிரதேச சபையினை தமிழரசுக்கட்சி கைப்பற்றியதை எல்லோரும் அறிவோம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு கிளைத் தலைவரும் முன்னாள் தவிசாளரும் இந்நாள் வேட்பாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் காரைதீவு கிளை தலைமையிலான பிரதேச சபை வேட்பாளர் அறிமுக நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை விவேகானந்தா விளையாட்டுக் கழக மண்டபத்தில் நடைபெற்ற வேளை அங்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் -

உண்மையில் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலவற்றை பேசி இருந்தாலும் எமது மண்ணுக்கு அவை மிகவும் பொருத்தமானவையாகும்.எமது காரைதீவு மண் என்பது அழிவின் விளிம்பில் இருக்கின்றது என்பதை அனைத்து பிரதேசவாழ் மக்கள் உணர்ந்து கொண்டு வாக்களிக்க வேண்டிய தார்மீக பொறுப்பில் இருக்கின்றீர்கள்.மொத்தமாக காரைதீவு பிரதேச சபையில் 7 வட்டாரங்கள் உள்ளடங்குகின்றன. தமிழர் பிரதேசங்கள் 4 வட்டாரங்களாகவும் 3 வட்டாரங்கள் இஸ்லாமியர்களின் வட்டாரங்களாகவும் காணப்படுகின்றன.இஸ்லாமியர்கள் அவர்கள் சார்ந்து வாக்குகளை அளிக்கின்றார்கள்.

தமிழர்கள் தமிழர்களுக்கு வாக்குகளை அளிக்கின்றார்கள்.ஆனால் இன்று சில தேசிய கட்சிகள் காரைதீவு பிரதேசசபையை இம்முறை தமிழர்கள் கைப்பற்றக்கூடாது என கூறி எம்மில் சிலரை மூளைச்சலவை செய்து தமிழரசுக்கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் என கூறுகின்றார்கள்.வடக்கு கிழக்கில் முதல் முதலாக திருவுளச்சீட்டின் ஊடாக காரைதீவு பிரதேசசபையினை தமிழரசுக்கட்சி கைப்பற்றியதை எல்லோரும் அறிவோம். எனவே தான் பேரினவாத கட்சிகளுக்கு வாக்களிக்காமல் எமது இருப்பை தக்கவைப்பதற்காக சரியான வழிகாட்டல்களை வழங்கி உரிய அரசியல் செயற்திட்டங்களை முன்னெடுப்பதன் ஊடாக வெற்றி பெற முடியும்.இல்லாவிடின் மரண வீடு முதல் இதர செயற்பாட்டிற்காக தமிழன் மண்டியிட வேண்டும். 62 வீதம் உள்ள நாங்கள் ஆட்சி அமைப்பதா? அல்லது மற்றவர்களுக்கு தாரை வார்ப்பதா என்பதை இதை




காரைதீவு புத்திஜீவிகள் உள்ளம் சார்ந்து சிந்தித்து செயற்படாவிடின் வரலாற்று துரோகம் மற்றும் பிழைகளை விட்டவர்களாக மாற நேரிடும்.

சலுகைகள் ஆசைவார்த்தைகள் வேலைவாய்ப்புக்கள் என பொய் கூறி வருபவர்களை விரட்டி அடியுங்கள் எமக்கு தூய்மையான உண்மையாக எம் மண்ணை நாங்கள் ஆழ்வதற்கு நீங்கள் அனைவரும் வீட்டிற்கு வாக்களியுங்கள். - என்றார்.

மேற்படி நிகழ்வு காரைதீவு இலங்கை தமிழரசு கட்சி கிளை செயலாளர் கதிர்காமத்தம்பி செல்வபிரகாஷ் தலைமை தாங்கியது டன் இலங்கை தமிழரசுக் கட்சி காரைதீவு பிரதேச சபை வேட்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## இந்த ஆளும்தரப்பு ஒரு வழலைப் பாம்பு சத்தமின்றி இனவாதத்தைக் கக்குகிறது

### காரைதீவில் ஸ்ரீநேசன் எம்.பி. குற்றச்சாட்டு

(சகாதேவராஜா)

நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய எமக்கு பாதுகாப்பு இல்லை ; வாகனம் இல்லை ; ஏன் ஆறுதல் பரிசாக இருக்கக்கூடிய 10 மில்லியன் ரூபாய் வரவு செலவுத் திட்ட நிதி கூட இல்லை. இதுதான் எமது சமகால நிலைவரம் என்றார்.

நீலமும் பச்சையும் என்று மாறி மாறி ஏமாற்றிய காலம் போய், இன்று சிவப்பு வந்து தமிழர்களை ஏமாற்றுகிறது. முந்தைய ஆளும்தரப்புக்கள் இனவாதத்தைச் வெளிப்படையாகச் சீறும் நாகபாம்பு, புடையன் பாம்பு என்றால், இந்த ஆளும்தரப்பு சத்தமின்றி இனவாதத்தைக் கக்கும் வழலைப் பாம்பு. எனவே எந்தக்காரணம் கொண்டும் தென்னிலங்கை பேரினவாத கட்சிகளுக்கு தமிழர்கள் ஒருபோதும் வாக்களிக்கக் கூடாது என்று காரைதீவில் நடைபெற்ற இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் பேசிய மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பின ஸ்ரீநேசன் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆறு மாத காலத்தில் தாங்கள் யார் என்பதனை இன்றைய ஆளும்தரப்பு தெட்டத்தெளிவாகக் காட்டி இருக்கின்றது. இனியும் அவர்களை நம்ப முடியுமா?

கடந்த ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தலில் நீலம், பச்சை கட்சிகளில் வெறுப்படைந்த தமிழர்கள் ஏதோ ஒரு வகையில் சிவப்பு கட்சிக்கு வாக்களித்தார்கள். ஆனால் அந்த சிவப்பு கட்சி இன்று தமிழர்களை 100% ஏமாற்றி வருவதனை நீங்கள் அறியவேண்டும்.

உதாரணமாக அவர்கள் கொண்டு வந்த கிளின் ஸ்ரீலங்கா இலங்கை சுத்தப்படுத்தும் திட்டத்தில் 18 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அதில் ஒருவர் ஆவது தமிழர் இல்லை. பல்லின நாடு என்கின்றார்கள். நாங்கள் இனவாத மதவாதமற்ற பேதமற்ற ஆளும்தரப்பு என்கிறார்கள். யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் ஆறு அரச தமிழ் எம்பிக்களை வைத்துக்கொண்டு அவர்கள் செய்வதெல்லாம் இனவாதமாகவே இ-ருக்கின்றன.

இதேபோன்று பரீட்சைகளை மேற்பார்வை செய்யும் குழுவிலே 7 பேரை நியமித்தார்கள் . அதில் அறுவர் சிங்களவர் ஒருவர் முஸ்லிம் அதில்கூட ஒரு தமிழரும் இல்லை. மயிலந்தனை மாதவனை மேய்ச்சல் தரைப் பிரதேசத்தை பொலன்னறுவை அம்பாறை சிங்கள மக்கள் சட்ட விரோதமாக குடியேறி இருக்கின்றார்கள் அவர்கள் வெளியேற வேண்டும் என்று நீதிமன்றம் கூறிய பொழுதும் தொடர்ந்து வரும் ஆட்சியாளர்கள் அதனை கவனத்தில் எடுக்கவில்லை.

அதேபோன்று கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்திலும் இதே நிலைமைதான். கிழக்கு பல்கலைக்கழக உயர்பீட பேரவையிலே 15 பேர் இருக்கின்றார்கள். அப்போது இதே பேரவையில் 9 தமிழர்கள் நான்கு முஸ்லிம்கள் இரண்டு சிங்களவர்கள் இருந்தார்கள். ஆனால் இந்த ஆளும்தரப்பில் நியமிக்கப்பட்ட பேரவையில் ஏழு சிங்களவர்கள் ஐந்து தமிழர்கள் மூன்று முஸ்லிம்கள் இருக்கின்றார்கள்.

இதைப்பிரதமரிடம் நாங்கள் நேரடியாக கேட்டோம். இது தேசிய பல்கலைக்கழகம் எனவே தேசிய மட்டத்தில்தான் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று கூறுகின்றார். அப்படி என்றால் தென் இலங்கையில் இருக்கின்ற பல்கலைக்கழகங்களில் ஒருவராவது தமிழர் உறுப்பினராக இருக்கின்றாரா? என்று கேட்க விரும்புகின்றோம்.

மொத்தத்தில் மாறி மாறி வந்த நீலம் பச்சை ஆளும்தரப்புக்கள் நாகப்பாம்பு புடையன் பாம்பு போன்று சீறிச்சத்தம் போட்டு துவேசத்தை காட்டியது . ஆனால் இந்த ஆளும்தரப்பு வழலைப் பாம்பு போல சத்தம் இல்லாமல் இனவாதத்தை கக்குகின்றது . கடிக்கிறது.

இதுவரை நாங்கள் சில பாடங்களை கற்கின்றோம் . நாம் ஜனாதிபதி தேர்தல் நாடாளுமன்றத் தேர்தலில் ஏதோ அவர்களை ஆதரித்தோம். ஆனால் உள்ளூராட்சி மன்றத்தில் அப்படி ஆதரித்தால் எமது அடையாளமே இல்லாமல் போகும்.

சிலவேளை உள்ளூராட்சி தேர்தலிலும் இந்த சிவப்புக்கட்சி வெற்றி பெறுமாக இருந்தால் மூன்று தேர்தல்களிலும் தமிழர்கள் எமக்கு ஆதரவளித்து இருக்கின்றார்கள் என்று கூறி மேலும் ஏறி மிதிக்க வருவார்கள்.

நாளை நாங்கள் ஒன்றுமே கேட்க முடியாது . சுயநிர்ணய உரிமையை கேட்க முடியாது. வடக்கு கிழக்கு இணைப்பைக் கேட்கமுடியாது . சுயாட்சியை கேட்க முடியாது. ஏன் தாயகம் என்ற சொல்லையே பயன்படுத்த முடியாது போகலாம் .எனவே சிந்தித்து செயல்பட வேண்டும்.

தேர்தல் என்றால் பணம் வரும் பானம் வரும் . உருண்டை வரும், சப்பட்டை வரும். ஆனால் எமது அடையாளங்கள் திட்டமிட்டு அழிக்கப்படும்.

பேரினவாதிகளுக்கு கூஜா தூக்கும் ரோஹணவின் பெறாமக்கள் சிவப்பு நிற சேர்ட்காரர்கள் வருவார்கள் . அபிவிருத்தி என்பார்கள். ஊழலை ஒழிக்க வேண்டும் என்பார்கள். வேலை தருகிறோம் என்பார்கள். இந்த மாயைகளுக்கு பசப்பு வார்த்தைகளுக்கு மயங்கி விடவேண்டாம். மயங்கினால் கட்டியிருந்த கோவணத்தையும் இழந்து அம்மணமாக நடுத்தெருவில் நிற்க வேண்டி வரும்.

1949 இல் தந்தை செல்வா ஆரம்பித்த, தமிழ் மக்களுக்கு என்று இருக்கின்ற ஒரே ஒரு கட்சியான தமிழ் அரசுக் கட்சிக்கு 100% வாக்களித்து வெற்றி பெறச் செய்யவேண்டும். அப்பொழுதுதான் எமது இனத்தின் தனித்துவம் பேணப்படும். இங்கு அதை எல்லாம் நான் கூற வேண்டிய அவசியம் இல்லை அனைத்தும் தெரிந்தவர்கள் காரைதீவு மக்கள்.

கடந்த ஆறு மாத கால பரீட்சையில் நாங்கள் புதிய ஆளும்தரப்பை நம்பி ஏமாந்தோம். இன்னும் நான்கு வருடங்கள் ஆறு மாதங்கள் இருக்கின்றன. அதிலும் ஏமாறப் போகின்றோமா? எனவே சிந்தித்து தமிழ் அரசுக் கட்சிக்கு மாத்திரம் வாக்களியுங்கள். என்றார்.

# ருஸ்தி மேல் பாயும் பயங்கரவாத தடைசட்டம் அடிப்படைவாதப் பிக்குகளின் மீதும் பாயுமா?

## இம்ரான் எம்.பி. காட்டத்துடன் கேள்வி



(ஹலால்தீன் )

ருஸ்தி மேல் பாயும் பயங்கரவாத தடை சட்டம் அடிப்படைவாத பிக்குகளின் மீதும் பாயுமா என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் கேள்வி எழுப்பினர்.

கிண்ணியாவில் இடம்பெற்ற பலஸ்தீன் ஆதரவு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

ருஸ்தியின் கைதுக்கு பின்னால் பாரிய அரசியல் நிகழ்ச்சி நிரல் ஒன்று உள்ளதாகவே நினைக்கிறேன். ஸ்டிக்கர் ஒட்டியதுக்கு பயங்கரவாத தடை சட்டத்தில் கைதுசெய்யப்பட்ட நிகழ்வு கவிதை எழுதிய முஸ்லிம் இளைஞன் கோட்டபாய அரசால் பயங்கரவாத தடை சட்டத்தில் கைது செய்யப்பட்ட நிகழ்வையே நினைவு கூருகிறது.

தற்போது இந்த கைதுக்கு பொலிஸால் சொல்லப்பட்ட காரணத்தை பார்க்கும்போது அவர்கள் ருஸ்தியை குற்றவாளியாக்க காரணத்தை தற்போது தேடுவதாகவே உணர்கிறேன்.

பொலிஸாரின் கூற்றுப்படி அவர் அடிப்படைவாத கருத்துக்களை கொண்டிருப்பின் ஸ்டிக்கர் ஒட்டும்வரை அவர் ஓர் அடிப்படைவாதி என அவர்களுக்கு தெரியாது. இலங்கையில் ருஸ்தி மட்டும்தானா அடிப்படைவாத கருத்துக்களை கொண்டிருக்கிறார். ஒவ்வொரு சமூகத்திலும் தாம் சார்ந்த சமூகத்தின் அடைப்படைவாத கருத்துக்களை கொண்ட பலர் உள்ளனர்.

அவ்வாறு எனில் அவர்கள் அனைவரையும் கைது செய்ய முடியுமா? அடிப்படைவாத கருத்துக்களை வெளிப்படையாக கூறும் பிக்குகளின் மீது இந்த சட்டம் பாயுமா?

இஸ்ரேலின் இராணுவவீரர்கள் ஓய்வு பெறும் இஸ்ரேலிய கொத்தனியாக இலங்கை மாறிவருவதை நாம் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டி உள்ளோம். அவர்களின் வணக்கஸ்தலங்கள் நிறுவப்படுவதையும் அவர்களின் ஆக்ரமிப்பு செயற்பாடுகளையும் கூறியுள்ளோம். அதற்கான நடவடிக்கை ஒன்றையும் இந்த அரசு மேற்கொள்ளவில்லை. அது ஏன் என்பது இந்த கைது மூலமாக தெளிவாகிறது.

இஸ்ரேலுக்கு எதிராக ஓர் ஸ்டிக்கர் ஒட்டியதுக்கே பயங்கரவாத சட்டம் எனில் இந்த அரசு இஸ்ரேலின் பாதுகாவலனாகவே செயற்படுகிறது என்பது தெளிவாகிறது.

பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவோம் ,இன மத பேதமற்ற அரசு என்ற கோஷங்களுடன் ஆட்சிக்கு வந்த இந்த அரசு தற்போது அதே பயங்கரவாத சட்டத்தையே ராஜபக்சக்களை விட மோசமாக பயன்படுத்த ஆரம்பித்திருக்கிறது.இந்த இரட்டை வேடத்துக்கு விரைவில் மக்கள் பதில் வழங்குவார்கள்.

ருஸ்தியின் விடுதலைக்காக நாம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் எனத் தெரிவித்தார்.

## காத்தான்குடி – நூராணியா பகுதியில் போதைப் பொருள் வர்த்தகர் கைது

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ்பிரிவுக்குட்பட்ட நூராணியா பகுதியில் 10 கிராம் 420 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள்களுடன் பிரபல போதைப் பொருள் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.



அந்த பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின் போதே சந்தேகநபர் போதைப் பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 10 கிராம் 420 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், 10,700 ரூபா பணம், 5 வங்கிகளின் ஏ.ரி.எம். அட்டைகள், போதைப்பொருளை தரம் பிரிக்கும் இயந்திரம், கைப்பை உட்பட பல பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை ) ஆஜர் படுத்தப்பட்டதுடன் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சி முழங்காவில் ஆரம்ப பாடசாலைக்கு முன்பாக பெற்றோர்கள் கவனவீர்ப்பு போராட்டம்

கிளிநொச்சி முழங்காவில் ஆரம்ப பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் மீது அவதூறு பரப்பி வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் பாடசாலையின் நுழைவாயிலை மூடி நேற்று (செவ்வாய்க்கிழமை) கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

முழங்காவில் ஆரம்ப பாடசாலையில் கடமையாற்றும் அதிபர் ஆசிரியர்கள் மீது சமூக வலைத்தளம் ஊடாக அவதூறு பரப்பி வருவதன் காரணமாக குறித்த பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் முழங்காவில் பொலிஸ் நிலையம் மற்றும் கல்வி திணைக்களம் ஆகியவற்றில் முறைப்பாடளித்துள்ளனர்.

முறைப்பாடளித்தும் இதுவரை எந்தவித தீர்வுகளும் வழங்கப்படாத நிலையில் பாடசாலைமாணவர்களின் பெற்றோர்கள் நேற்று குறித்த கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்த கவனவீர்ப்பு போராட்டம் காரணமாக குறித்த பாடசாலையில் கற்றல் செயற்பாடுகள் முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







# அபிவிருத்தி பயிற்சி நெறி!

ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான கிராமிய அபிவிருத்தித் தயாரித்தல் தொடர்பான பயிற்சி நெறி நேற்று(செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த பயிற்சி நெறியில் கிராமிய அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன் அவர்களும், பங்கேற்பு அடிப்படையிலான கிராமிய அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல் தொடர்பில் கண்டாவளை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் அமல்ராசா ஆகியோர் வளவாளராகக் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் விடய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். 113







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.04.2025இல் வெளியிடப்பெற்றது